**ஹபராதுவ பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 23 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 08 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, ஹபராதுவ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது பிரதான அலுவலகத்தை நவீன மயப்படுத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 439,800 தொகை மற்றும் கொக்கல தகனசாலையின் உடல் ஆரோக்கிய கழிவறை முறையாக நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,558,745 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆண்டின் போது மாவட்ட செயலகத்தினால் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த கொக்கல சிரிமாவோ பண்டாரனாயக்க நடன அரங்கு மற்றும் அஹங்கம பொது வர்த்தக தொடர் கட்டிடத் தொகுதியை சேர்ந்த கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) 2017 ஆண்டின் போது உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த 2,000 லீட்டர்கள் கொண்ட நீர்த் தொட்டிகள் 02 இன் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது சபை கொல்வனவு செய்திருந்த ரூபா 130,000 தொகைக்கான 65 லீட்டர்கள் கொண்ட, 04 சேதனப் பசளை பாத்திரங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 5,919,081 தொகையினை கடன் கொடுத்தோர் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடனை செலுத்தி முடிந்திருந்த போதிலும், ரூபா 304,869 இற்கான செலுத்த வேண்டிய மீதியொன்று நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2017 ஆண்டின் போது ஏலவிற்பனை செய்திருந்த விற்பனைப் பெறுமதி ரூபா 491,430 இற்கான 41 பண்ட அலகுகளின் கொல்வனவு விலையினை கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஒ) அஹன்கம புதிய வர்த்தக கட்டடத் தொகுதியில் பொதுச் சந்தை கடைகள் தொடர்பாக பெற வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 11,550,000 தொகையினை மற்றும் வாடகை மற்றும் தண்டப்பணம் ரூபா 264,600 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 132,564,922 தொகைக்கான 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய பதிவேடுகளில் காணப்பட்டுள்ள மீதிகளுக்கிடையே வித்தியாசங்களின் கூட்டுத்தொகை ரூபா 101,019,120 ஆகும்.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

2008 ஆண்டு முதல் முன் கொண்டுவந்து காணப்படும் ரூபா 601,430 தொகைக்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியினை இணக்கங் கண்டு தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

பல வருட காலமாக நிதிக் கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டு வரப்பட்டு காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 1,827,260 தொகைக்கான பெற வேண்டிய 05 கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2008 ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் மாற்றமின்றி முன் கொண்டு வரப்பட்டு காணப்படும் இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 1,410,752 தொகை மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டிய வரி ரூபா 1,480,426 தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.5 தகவல்கள் கணக்காய்விற்காக சமர்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை 147,621,562 இற்கான 11 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | |
| (i) விதி 33 | - | வீதி வரி செலுத்துவதை புறக்கணிப்பு நபர்கள் தொடர்பாக அட்டவணைகள் மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. |
| (ii) விதி 145 | - | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக விரிவான கூற்றொன்று தயாரித்து பேரேட்டில் காணப்படும் மீதியுடன் சீராக்கல் செய்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 395(ஈ) | | சபையின் பொது வங்கிக் கணக்கில் 2017 ஜூலை முதல் 2018 ஏப்ரல் வரை வங்கி இணக்கக் கூற்றுகள் தயாரித்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 570 மற்றும் 571(1)(2) | 1,922,347 | 02 வருட காலத்தை மிகைத்திருந்த 90 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 1645 மற்றும் 1646 | | சபைக்குச் சொந்தமான ஓட்ட நிலையில் காணப்படும் 12 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த செயலாற்றுகை பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2015 ஜூலை 10 திகதி 02/2015 ஆம் இலக்க திறைசேரி செயலாளலரின் மற்றும் அமைச்சுச் செயளாலரின் சுற்றறிக்கை | - | சபைக்கு சொந்தமான 09 வாகனங்கள் தொடர்பாக அப்புறப்படுத்துவதற்கு அல்லது பொருத்தமான வேறு மாற்று செயற்பாடுகளை மேற்கொள்வற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | 2010 ஆகஸ்ட் 17 திகதியில் PE/01/01 இலக்கம் கொண்ட மின்சக்தி மற்றும் வலு அமைச்சின் சுற்றரிக்கை | - | மீளாய்வாண்டின் போது பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகளுக்காக அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 223,262 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,913,388 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காசு பெற்றுக் கொள்ளல் மற்றும் பாதுகாப்புடைய பாதுகாப்பு இருப்பு பெட்டியில் வைப்புச் செய்து நாளாந்தம் வங்கியில் வைப்புச் செய்தல் அடியிதழ் புத்தகத்தை பேணப்படல் மற்றும் அதற்கு உரிய அடியிதழ்களினை பாதுகாப்பான முறையில் கலஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் மற்றும் வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரித்தல் ஆகிய கருமங்களை ஒரே உத்தியோகத்தருக்கு சாட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது பொது கணக்குகளுக்குரிய இறுதியாக தயாரித்திருந்த வங்கி இணக்க கூற்றில் காட்டியுள்ள ரூபா 533,798 இற்கான இனங்காணப்படாத செலவு மீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கிழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 3,814,100 | 3,705,913 | 3,392,765 | 7,319,814 | 7,437,265 | 5,088,103 | 18,553,860 | 7,006,666 |
| (ii) வாடகை | 4,829,200 | 5,078,693 | 4,975,685 | 155,027 | 51,350,250 | 4,402,135 | 4,530,000 | 52,019 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 5,073,250 | 6,374,386 | 6,353,986 | 51,000 | 4,702,150 | 3,854,912 | 3,866,062 | 30,600 |
| (iv) ஏனைய வரு மானங்கள் | 63,808,450 | 15,832,955 | 16,327,637 | 29,048,021 | 52,541,650 | 16,323,436 | 20,160,085 | 29,542,703 |
| | 77,525,000 | 30,991,947 | 31,050,073 | 36,573,862 | 116,031,315 | 29,668,586 | 47,110,007 | 36,631,998 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்காக மதிப்பீட்டு வருமானம் ரூபா 77,525,000 தொகையும் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 30,991,947 தொகையும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 31,050,073 தொகையும் காணப்பட்டதுடன் நிலுவை வருமானம் ரூபா 36,573,862 தொகையாக காணப்பட்டது.

### 2.3.3 வீதவரியும் வரியும்

மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட வருமானம் மற்றும் வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை மீதியுடன் ரூபா 10,712,579 தொகையான சேகரிக்கப்பட வேண்டிய வருமானத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 3,392,765 தொகையாக இருந்த காரணத்தினால், வருட இறுதியில் காணப்பட்ட நிலுவை மீதி ரூபா 7,319,814 தொகையாக இருந்தது.

### 2.3.4 வாடகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 4,829,200 மற்றும் சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 5,078,693 தொகை காணப்பட்டதுடன் மதிப்பீட்டு வருமானத்தில் சிட்டையிடப்பட்ட வருமானம் 105 சதவீதம் ஆகும். வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 155,027 தொகையாக இருந்தது.

### 2.3.5 அனுமதிப் பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டிற்காக மதிப்பீட்டு வருமானம் ரூபா 5,073,250 தொகையாக இருந்ததுடன் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 6,374,386 தொகையாக இருந்து வருட இறுதியில் உள்ளவாறு மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவை மீதி ரூபா 51,000 தொகையாக இருந்தது.

**2.3.6 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 14,642,995 மற்றும் நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 5,158,832 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கை திட்டம்**

ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிக் காணப்பட்ட செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2007 ஜனவரி 01 தகதி முதல் 2016 திசெம்பர் 31 திகதி வரை பத்து வருட காலத்தில் சபையினால் எழுகெடிய பிம்பாராம விகாரைக்கு சொந்தமாக காணி ஒன்றின் தரை வரி செலுத்தும் அடிப்படையில் பெற்று குப்பை முகாமைத்துவ செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பிரதேச மக்களின் எதிர்ப்பின் காரணமாக 2015 திசெம்பர் 02 திகதி முதல் அந்த காணியில் குப்பை முகாமைத்துவம் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ரூபா 750,000 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் அஹங்கம உப அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ii) PL/1/15/12 இலக்கம் கொண்ட உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சு செயலாளரின் குப்பை முகாமைத்துவம் தொடர்பாக வழிகாட்டலின் பிரகாரம் குப்பை முகாமைத்துவம் தொடர்பாக நீண்ட காலத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டு அளவில் குப்பைகள் போடுவதற்காக குறிப்பிட்ட இடம் ஒன்று காணப்படாததுடன், தற்காலிகாமாக ஹபராதுவ வியனகொட விஹாரைக்குச் சொந்தமான காணி ஒன்றில் சுண்ணாம்புக்கல் தோண்டப்பட்டு கைவிடப்பட்டிருந்த கிடபகுதர குப்பை போட்டு மண் போடப்பட்டு மூடப்பட்டிருந்தது. நீர் நிரம்பிய கிடங்குளில் குப்பை போடப்பட்டதினால் அந்த இடம் மிகவும் துர்நாற்றத்துடன் காணப்பட்டதுடன், அந்த காணியில் எல்லையில் காணப்பட்ட ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் மற்றும் பக்கத்தில் வீடுகளில் வசிப்போரின் சுகாதாரத்தின் மீது ஆபத்து ஒன்று காணப்பட்டது.

(iv) மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் வீடுகளை சார்ந்த மற்றும் அரச நிறுவனங்களில் கழிவுப் பொருட்களை வகைப்படுத்தும் செயற்பாட்டை மேம்படுத்துவதற்காக குப்பை வகைப்படுத்தல் 79 தொகுதி பாத்திரங்கள் இலவசமாக வினியோகிப்பதற்காக சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் 75 தொகுதிகள் மற்றும் மேற்கூறிய ஏற்பாடுகளின் கீழ் சலுகை விலைக்கு விற்பனை செய்வதற்காக வழங்கியிருந்த 250 சேதன பசளை பாத்திரங்களில் 208 பாத்திரங்கள் 2018 ஏப்ரல் வரை வினியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் கலஞ்சியத்தில் காணப்பட்டது. இதன் காரணமாக மேற் கூறிய செயற்திட்டங்களின் மூலம் எதிர்ப்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்காகிய உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்டகால திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 02 டிரக்டர்கள் மற்றும் கப்வண்டி ஒன்று என்பவற்றை 20 வருட காலமாக பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையில் பேணப்பட வேண்டிய நிலுவை வருமான அறிக்கை, உள்நாட்டு கடன் பதிவேடு கடன்பட்டோர் பதிவேடு, பி.ச.07 அறிக்கை மற்றும் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆளணித் திட்டத்தின் படி மிகை பதவியணி 16 ஆக இருந்ததுடன், வெற்றிடங்களின எண்ணிக்கை 20 ஆக இருந்து மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்கும், வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இற்கு இணங்காத வகையில் சேர்க்கப்பட்டிருந்த 9 பிரதியீட்டு ஊழியர்களுக்கு சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்துவதற்கு 2017 ஆண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 2,966,780 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவி அல்லாத ஒன்றான மின் தொழிலாளர் பதவிகாக 2014 ஆகஸ்ட் 24 திகதி ஊழியர்கள் இருவர் சேர்க்கப்பட்டு 2017 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 772,272 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

அஹங்கம உப அலுவலகத்திற்கு சொந்தமான புதிய வர்த்தக கட்டிடத் தொகுதியின் தரை மாடியில் கடை ஒன்றினை வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆண்டு முதல் செயற்படாத நீர் பவுசர்களை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் அஹங்கம உப அலுவலகத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் 03 டிரக்டர் டெய்லர்கள் செயற்படாது சபையில் மற்றும் உப அலுவலகத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

(இ) 2013 ஆண்டு முதல் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் சீமெந்து கலவை இயந்திரம் ஒன்று உப அலுவலக வளவில் காணப்பட்டதுடன் இந்த இயந்திரம் தொடர்பான தகவல்கள் ஏதும் சபையில் காணப்படவில்லை.

**3.5.2 உரிமையை உரித்தாக்கியிருக்காத சொத்துக்கள்**

சபையினால் பயன்படுத்தப்படும் 04 வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையே கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 07 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை 23,353,773 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், 02 செலவு விடயங்கள் பிரதி கூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 698,550 தென ஆக இருந்தது.

(ஆ) 04 வருமான விடயங்களில் பிரதிகூலமாக முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 48,083,884 தொகையாக இருந்ததுடன், அப்பெறுமதி 03 சதவீதம் முதல் 46 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**4.2 உள்ளக கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 திகதி தபபா/யஹ/01/ நா.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | முறைபாடு |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படாமை |
| (ஆ) | பதவியணி முகாமைத்துவம் | (i) | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை |
| | | (ii) | கடன் மீதிகள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானம் சேகரிக்காமை. |
| | | (ii) | நிலுவை வீத வரி அறவீடு செய்வதற்கு ஆதனங்களை தடை செய்யும் உத்தியோகத்தர் நியமனம் செய்திருக்கவில்லை. |
| | | (iii) | குப்பை வரி அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஈ) | முகாமைத்துவ திறமையின்மை | (i) | வங்கி இணக்கக் கூற்று தயாரித்திருக்கவில்லை. |
| | | (ii) | பேணப்பட வேண்டிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் | (i) | திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கு பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்று சபையில் காணப்படவில்லை. |
| | | (ii) | குப்பைப் பாத்திரங்கள் வினியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |